# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சியில் 03.05.2023 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் :1**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து மறு சுழற்சி செய்யப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு, மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதி மற்றும் 15th CFC Grant நிதியில் இருந்து வழங்கவும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.231, நாள். 24.01.2023–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 24.03.2023––ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று கீழ்காணும் விவரப்படி ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. அந்த ஒப்பந்தப்புள்ளிக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் முன் வைக்கப்படுகிறது.

| வ. எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **பொதுநிதி மற்றும் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (15th CFC Grant)** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை (Outsourcing) முறையில் ஒப்பந்த நிறுவனம் மூலம் மேற்கொள்ளுதல். | 334.45 | M/s. Sumeet Green Enviro Services Pvt ltd., சென்னை | மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.76% குறைவு |

**(கோப்பு எண்.329/2018/எச்1)**

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.76% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. Sumeet Green Enviro Services Pvt ltd., சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 332**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**